சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரணஹ கார்த்திகைமீ சரு உ (1944 நவம்பர்மீ 30 வியாழக்கிழமை) [இல கூடு

# பெரும்பான்மை வகுப்பாதிக்கத்தைத் தமிழர் வெறுப்பர்

## தமிழர் காங்கிரஸில் ஸ்ரீ பொன்னம்பலம் வீர கர்ச்சனை

### சிறுபான்மைச் சமூகத்தினரின் ஏகோபித்த ஒற்றுமை

கொழும்பு, நவ 30

அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் மகாநாட்டின் ஆரம்பக் கூட்டம் சென்ற திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்றது. நாட்டின் பலபாகங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் கூட்டத்துக்கு வந்திருந்தனர். மேடைமீது இந்திய அரசாங்கப்பிரதிநிதி திரு. ஆனே, மகாநாட்டுத் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவர் திவான்பகதூர் ஐ. எக்ஸ். பெரேரா; திரு. கோ. நடேசஐயர், திருவாளர்கள் ஸி. ஜி. ஸி. கோர், ஜி. ஞானசேகரம், ஜி. ஆர். மோதநா, டாக்டர் இ. வி. நாகநாதன் ஆகியவர்களும், மற்றும் பல பிரமுகர்களும் பிரசன்னமாயிருந்தனர்.

### மிஸ்டர். ஐ. எக்ஸ் பெரேரா வரவேற்புப் பிரசங்கம்

திவான்பகதூர் ஐ. எக்ஸ். பெரேரா பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசுகையில் பின்வருமாறு கூறிப்பிட்டார்:—

இது ஓர் மகத்தான கூட்டம். இலங்கை வாழ் தமிழர்களின் சரித்திரத்தில்—ஏன் இலங்கைச் சரித்திரத்திலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய கூட்டம். தமிழ்த்தாயின் மணிக்கொடியின்கீழ், தமிழ் சமூகத்தவர்களாகிய நாம் சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமை என்பதை உணர்ந்து ஒற்றுமையாய் ஒருகுடையின்கீழ் கூடியுள்ளமாம்பெரும் கூட்டம்.

நாம் யாவரும் தமிழர்கள்; தமிழ் நாட்டவர்கள்; தமிழ்நாடு தவம் புரிந்த நாடு. தமிழர் உலகத்தின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். தமிழரின் ஜனத்தொகை மொத்தம் 300 லக்ஷமென மதிப்பிடப்படுகிறது.

அகில உலகமும் புனர்நிர்மாண வேலைகளில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளை, எங்கள் தாய்த்தேசமான இலங்கையின் எதிர்காலத் திட்டங்களை வகுப்பதற்கு இலங்கை மக்களுக்கும் ஓர் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. யுத்த முயற்சிக்கு இலங்கை அளித்துள்ள மகத்தான உதவிகளைப் பாராட்டும் முகமாக, இலங்கைக்கு விரைவில் ஓர் புதிய அரசியல் சீர்திருத்தம் அளிக்கப்படவிருக்கிறது. ரப்பர் தேயிலை தோட்டங்களிலுள்ள தமிழ் தொழிலாளர் யுத்த முயற்சிக்கு தங்கள் சக்தியாவையும் ஒன்று திரட்டி மிகப் பெருமிதமான ஒத்தாசைகள் செய்துள்ளனர். உணவுக் கஷ்டமான இக்காலத்தில் கால்வயிறு, அரைவயிறுச் சாப்பாட்டுடன், வேறு எவ்வளவோ இன்னல்களையும் அனுபவித்து தங்களுக்கு ஓய்வு தினங்களில் கூடிய மிக்க கடினமான வேலைகளை யுத்தத்தின் நிமித்தமாகச் செய்து யுத்தத்திற்குப் பெருத்த உதவி புரிந்து வருகின்றனர். இந்நாட்டின் முன்னேற்றத்துக்காக தங்களால் இயன்றதையெல்லாம் செய்வதற்கான பூரண சந்தர்ப்பத்தை தமிழருக்கு முற்றும் அளிப்பதே இந்த அகில இலங்கைத் தமிழர்காங்கிரஸின் முக்கிய நோக்கமாகும். பல்தரப்பட்ட சமூகங்களைக் கொண்டது இந்நாடு. இதில் ஒவ்வொரு சமூகமும் தக்க பாதுகாப்புடன் வாழ உரிமையுண்டு.

சகல துறைகளிலும் இலங்கை முன்னேற்றமடைவது, அதிலுள்ள ஒவ்வொரு சமூகமும் சமசரவுற முறையிலும், பிறரால் ஆக்கிரமிக்கப்படாத வழியிலும், பூரணமாய் முன்னேற்றமடைவதையே பொறுத்திருக்கும் சார்ந்ததென்பது இக்காங்கிரஸின் நம்பிக்கை. துர் அதிர்ஷ்டவசமாய் காங்கிரஸின் அரசியல் கொள்கை சில சாராரிடையே அதிருப்தியையும், ஆக்ஷேபனையையும் கிளப்பியிருக்கிறது.

சமூக உணர்ச்சிகளை நாண்டி அதிகாரங்களைக் கைப்பற்றி, அவ்வண்ணம் கைப்பற்றப்பட்ட அதிகாரத்தால் இயற்கையாய் ஏற்படக் கூடிய அதிகாரமமதைகளுக்கு ஏதுவாயிருக்கக்கூடிய அரசியல் முறைகளெதுவாயினும் அதைக் கொடுக்கது நடத்துவதைப் பார்க்க ஆவல் [illegible] ஆக்கமாய்ப் புகுத்துவதையே நாம் எதிர்க்கின்றோம்.

### ஸ்ரீ பொன்னம்பலத்தின் அக்கிராசனப் பிரசங்கம்

அப்பால் தலைவர் ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் தமது அக்கிராசனப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். அப்பொழுது அவர் கூறியதாவது:—

'1921—22 ல் நடந்திய அரசியல் திட்டத்தின்கீழ் தமது சட்டசபையின் 37 ஸ்தானங்களில் சிங்களவர்களுக்கு இருந்தது 18 ஸ்தானங்கள்தான். சமபல பிரதிநிதித்துவம் அந்த அரசியல் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததால் அது திருப்திகரமாக வேலைசெய்தது.

டொனமூர் திட்டத்தில் நிலைமை தலைகீழ்ப்பாடமாக மாறிவிட்டது. அதிலிருந்துதான் வகுப்புவாதம் தலைவிரித்தாட ஆரம்பித்துள்ளது. அந்தச் சந்தர்ப்பங்களில் அரசாங்க சபையிலுள்ள சிங்களப் பிரதிநிதிகள் வசீகரித்து வாக்குக் கொடுத்து தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொண்டிருக்கிறார்கள். அரசியல் ஆதிக்கம் ஒரு வகுப்பின் கைப்பிடிப்பதின் பலன்தான் இது. டொனமூர் திட்டத்தினால் வகுப்புவாதம் ஒழிந்துவிடுமென்று டொனமூர் கமிஷனர்கள் கருதியதற்கு மாறாக வகுப்புத் துவேஷம் தலைவிரித்தாடுவது இந்த அரசியல்திட்டத்தின் பயனாகத்தான். சிறுபான்மை வகுப்புகளின் நிலைமை இந்த அரசியல் திட்டத்தின்கீழ் படுமோசமடைந்துவிட்டது. உதாரணமாக 4 லட்சம் ஜனத்தொகைகொண்ட முஸ்லிம்களால் ஒரே ஒரு பிரதிநிதியைத்தான் தெரிவுசெய்து சட்டசபைக்கு அனுப்ப முடிந்திருக்கிறது. பொதுத்தேர்தல்களில் வரம்பில்லாது வகுப்புவாதக் கூச்சல் கிளப்பப்படுவது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். இலங்கையில் சிறுபான்மையோர் தங்களது உரிமைகளின் பாதுகாப்புக்கு கவர்னரின் விசேஷாதிகாரம் ஒன்றையே நம்பியிருக்க வேண்டியிருப்பது ரொம்பவும் துர் அதிர்ஷ்டமானது. இந்தியாவில் முஸ்லிம்கள் 1916ம் ஆண்டில் கோரியதைவிட அவர்களுக்கு அதிகமான பிரதிநிதித்துவமளித்து இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு திட்டத்தைத் தயாரித்தது. இலங்கையில் பெரும்பான்மை வகுப்பினரான சிங்கள வகுப்பின தலைவர்களோ, தங்கள் நலனை தவிர பிறர் நலனைப் பற்றி கவனிப்பதோ ஆவலுடன் பார்ப்பதோ கிடையாது. பெரும்பான்மையோர் ஆட்சிப ஜனநாயக ஆட்சியென்று சிலர் வாதிக்கலாம். ஓர் வகுப்பினர், ஓர் பாஷையைப் பேசுபவர்களுடைய கட்டுப்பாடான ராஜ்ய நடத்தைகளின் [illegible] இத்தகைய [illegible] ஜனநாயக ஆட்சியென்று [illegible] நாட்டில் ஆட்சி பெறுவதற்கு அர்த்தமில்லை. உதாரணமாக அமெரிக்காவின் ஜனத்தொகையில் 1 % பேர் இந்துக்கள் ஆயினும் அந்த சட்டசபையில் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஸ்தானம் 42% தான். இலங்கையின் ஜனத்தொகையில் இந்தியர் 6 % ஆகையால் அவர்களுடைய பிரதிநிதித்துவத்தை 50% ஆக்கச்செய்யப்படுகிற முறை வாணமென்று கூற எவ்வித நியாயமுமில்லை. இந்நாட்டில் உயர்ந்த ஸ்தானம் பெறுவதற்கு [illegible] தகுதியுள்ளவர்கள் [illegible] மாட்டார்கள்.

இலங்கையின் யுத்த முயற்சியைப்பற்றி மிஸ்டர் டி. எஸ். சேனநாயக்க வெகு ஆவலாய்ப் பேசுகிறார். ஆனால் அந்த யுத்த முயற்சிக்கு மூல புருஷர்கள் யார்? ரப்பர் தேயிலைத் தோட்டங்களில் பாடுபடும் இந்தியத் தொழிலாளர்கள் என்பதை யார் மறுக்க முடியும்?

### பஞ்சாப் மெயிலுக்கு விபத்து

பட்னா நவ 23—

6ம் இலக்கப் பஞ்சாப்மெயில் நேற்றிரவு பெரிய விபத்துக்குள்ளாகியது.

விபத்து தர்ரா என்ற இடத்துக்கு அருகே பெஹாவுக்கும் கரிஸாத்துக்குமிடையே 375-வது மைலில் இரவு 12 40 மணிக்கு ஏற்பட்டது.

எஞ்சினும், ஆறு முக்கிய வண்டிகளும் பாதையிலிருந்து விலகிக் கரையில் போய் மோதுண்டன.

தபால் வண்டியும் தண்டவாளத்தைவிட்டு இறங்கிவிட்டது. சேதம் எவ்வளவு என்று இப்போது மதிப்பிட முடியவில்லை. ஆயினும் ஏராளமான சேதம் ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

---

ஸோல்பறிகமிஷனையும்அது அளிக்கும் அரசியல் திட்டத்தையும் பகிஷ்கரிக்கப்போவதாக பூச்சாண்டி காட்டப்படுகிறது. இந்தப்பூச்சாண்டிகளுக்குப் பயப்படும்காலம் மலையேறிவிட்டது. இப்படி யெல்லாம் பூச்சாண்டி காட்டிவிட்டு இலங்கைக்குச் சாம்ராஜ்ய நாட்டு அந்தஸ்து வேண்டுமென்று அரசாங்கசபை நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தைசேனநாயக்க இங்கிலாந்திலுள்ள தமதுஏஜண்டான சேர்ஒலிவர்குணத்திலகாவுக்கு விமானமூலம் அனுப்பியிருக்கிறாராம்! பிரிட்டிஷ் ஆட்சி வீழ்ச்சியடைந்தால் அப்பொழுது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகச் சிங்களவர்கள் சிருஷ்டித்துள்ள ஒரு ராஜீய ஸ்தாபனந்தான் போதுஜன பாதுகாப்புக் கந்தோர் என்று நான் அழுத்தமாகக் கூறமுடியும்.

இலங்கையின் சுபீட்சத்துக்கு மூல புருஷர்களாயிருக்கும் இந்தியத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை சகல பிரஜா உரிமைகளும் அளிக்கப்படவேண்டும். அடிமைப் படுத்தி வைக்கப்படுவதை தமிழ்ச் சமூகம் இனி ஒருநாளும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.

காபினட் (Cabinet) ஆட்சி முறை நம் நாட்டுக்கு உகந்ததல்ல. கமிட்டி ஆட்சி முறையையே சீர்திருத்தி அமைக்கவேண்டும். சுவிற்ஸர்லந்தில் இருப்பதைப் போன்ற ஆட்சிமுறை இலங்கைக்கு மிகவும் பொருத்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹு
கார்த்திகை கடுஉ வியாழக்கிழமை

## யுத்த நிலை

இப்பொழுது மேற்கு யுத்த முனையில் ஐக்கியராச்சியத்தினர் பலஇடங்களில் ஒன்றன்பின்னென்றாக வெற்றியடைந்து வருகின்றனர். ஒல்லாந்த நாடு தொடக்கம் சுவிஸ்வரையில் 500 மைல் விஸ்தாரத்திலுள்ள பிரதான ஸ்தானங்களில் ஐக்கிய ராச்சியங்களின் படை ஆறு அணியாகப் பிரிந்து நின்று பகைவரைத் தாக்குகின்றன, அவற்றுள் ஐந்து அணி ஜர்மனியருக்குரிய தானங்களிலேயே புகுந்து சமர் செய்கின்றனவாம்; பெல்வோர்ட், மூல்ஹவ்ஸ், ஸ்ராஸ்பேர்க், மெற்ஸ், ஸரஸ்பேர்க் முதலிய பகைவருக்குரிய சில பிரதான தானங்களை ஐக்கிய படையினர் கைப்பற்றலாயினர். ஐக்கியராச்சியத்தினர் சார்பாக நின்று சமர் செய்யும் புதிய பிரான்ஸியப்படை அல்ஸாஸிலும் சுவிஸ்யுத்தமுனையிலும் வெற்றிபெற்று வருகின்றது; ஜர்மனிய சைநியம் மெல்ல மெல்ல றயின்நதிப் பிரதேசம் வரையிற் பின்வாங்கி வருகின்றது; பகைவர் காலத்தைக்கடத்தித் தம்மைப் பலப்படுத்துவதற்கிடையில் அவர்களை அடித்துவிட வேண்டுமென்பதே சேனாபதி எயிஸன் ஹோவருடைய நோக்கமாம்.

ருஷிய ஜர்மனிய யுத்த முனையில் 52 ருஷியப்படையணி ஜர்மனியரை எதிர்த்து நின்று சமர்புரிகின்றனவாம். ஆனாலும் பிரான்ஸிலே ஐக்கிய ராச்சியப்படையினர் இலகுவாக வெற்றியடைந்தவாறு, ஜர்மனியிலே அவர்கள் வெற்றியடைதல் இலகுவல்லவெனச் சொல்லப்படுகின்றது; ஜர்மனியர் இந்த நேரத்தில் தங்கள் சொந்தநாட்டிலுள்ள யுத்தமுனைகளில் நின்றே பகைவரையெதிர்த்துத் தாக்குகின்றனர். அவர்களுடைய யுத்த முனைகளின் பின்புறத்தே சிறந்த அரண்கள் முந்தியே வகுக்கப்பட்டுள்ளன; மேலும் காலநிலை இப்பொழுது ஜர்மனியருக்கே அநுகூலமானதாம். றயின்நதித் திடரில் நடக்கும் யுத்தத்தில் ஐக்கியராச்சியப்படை அதிகம் முன்னேறிச்செல்ல முடியாமல் நிற்கின்றதாம். இந்த றயின்நதியைத் தாண்டி ஐக்கியப்படை ஜர்மனியினுட் புகுதல் மிகவும் கஷ்டமென்று சொல்லப்படுகின்றது; இனி நடக்க வேண்டிய கோரமான யுத்தம் றயின் நதி தீரத்திலேதான் நடக்குமென அரசதந்திரிகள்எதிர்பார்க்கின்றனர். றயின் நதியைத்தான் ஐக்கியப் படையினர் ஒருவாறு தாண்டி ஜர்மனியின் எல்லையுட் புகுந்தாலும், பிளாய்க்வோறஸ்ற், ஓடன் வால்ட், ரானஸ் என்னும் இயற்கையரண்களைச் சிதைத்து முற்பட்டுச் செல்லுதல் கஷ்டமாம்.

இது இவ்வாறாக, கிழக்கே யப்பானியருடன் செய்யும் யுத்தத்தில் ஐக்கிய ராச்சிய ஆகாயப்படைகள் யப்பானியருக்குப் பலவகையான சேதங்களை இழைத்து வருகின்றனவெனலாம். யப்பானிய பிரதான பட்டினமாகிய தோக்கியோவின்மேல் அமெரிக்கஆகாயப்படைகள் பறந்து சென்று பல உயிர்ச்சேதத்தையும் பொருட்சேதத்தையும் ஆக்கி அவர்களுடைய யுத்தப் படைக்கலங்கள் வைக்கப்பட்டுள்ள தானங்களையும் யுத்தத்திற்காகிய கருவிகளை ஆக்கும் தொழிற்சாலைகளையும் சிதைத்தனவெனச் சொல்லப்படுகின்றது; இவ்வளவோடமையாது அமெரிக்க ஆகாயப்படை யப்பானிய நகரங்கட்கு இன்னமும் அனர்த்தம்விளைவிக்குமெனவே காத்திருத்தல் பிழையாகாதாம். குறித்த ஆகாயப்படைகளால் யப்பானிய கடற்படைகளும் சிதைக்கப்படுகின்றனவாம்; தென் சீனத்திலே யப்பானியர் சில ஆகாயப் படைத் தானங்களைக் கைப்பற்றிவிட்டனர்; சீன யுத்தமுனையிற் சீனர் அதிகவெற்றியடைந்துவருவதாகக்காணப்படவில்லையாம். யப்பானிய படை சீனத்தை இரண்டாகப் பிரித்து இடையிற்புகுந்து கொண்டதாம்; இதனால் யப்பானியர் தங்களுக்குரியனவாகிய மஞ்சூரியாவிற்கும் ஹொங்கொங் என்னும் நாட்டிற்குமிடையே போக்குவரத்திற்காகிய சிறந்த வழியை ஆக்கலாயினர். யப்பானியர் தென்சீனத்திலுள்ள தங்களுடைய சைநியத்தைப் பெலப்படுத்துகிறார்களென சேனாபதி உவெடெம்மீர் என்பவர் தெரிவிக்கின்றார். பர்மா யுத்த முனையில் பலஇடங்களில் பிருத்தானிய இந்திய சைநியம் யப்பானியரைத் தோல்வியுறச் செய்து வருகின்றன.

## ஒருவகுப்பாதிக்கத்தைத் தமிழர் வெறுப்பர்

சென்ற பதின்மூன்று வருடங்களாக, டொனமூர் அரசியல் திட்டத்தின்கீழ் பெரும்பான்மையராகிய சிங்களவகுப்பாதிக்கத்தினரால் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையராகிய தமிழர்கள் "இனி இந்த அரசியற் பொருளாதார சமூகக் கஷ்டத்தைப் பொறுக்கமாட்டோம்—எந்த வகுப்பாதிக்கத்தையும் வெறுப்போம்—சமஅந்தஸ்துள்ள சுயராஜ்யமே நமக்குத் தேவை" என்று சென்ற திங்கட்கிழமை கூடிய அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் மகாநாட்டில் அழுத்தந்திருத்தமாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். தமிழரின் வருங்காலநிலையில் நம்பிக்கையுள்ள எந்தத் தமிழ் மகனும் இதை முற்றாக அங்கீகரித்தே தீருவான் என்று நம்புகின்றோம்.

பூரண அரசியல் ஞானமில்லாத சர்வசிங்கள மந்திரி சபையினரின் 'தர்பாரால்' தமிழர் வெறுக்கப்பட்டதற்கும், சிறுபான்மைச் சமூகத்தினர் பெரும்பான்மையருடன் ஒத்துழைக்காவிட்டால் தாமே தமது சவக்குழியை தோண்டிக்கொள்ளுகின்றனரெனச் சிங்கள மந்திரியார் ஒருவர் கூறியதற்கும், இலங்கையின் எதிர்கால அரசியற்றிட்டத்தை இரகசியமாகத் "தயாரித்து" நேரே சீமைச்சாமியின் அங்கீகாரத்துக்கு அனுப்பியதற்கும், சிறுபான்மைச் சமூகத்தினர் இனி முற்றாக ஒடுக்கப்படுவர் எனச் சிங்களப பிரதிநிதிஒருவர், சென்ற சிலநாட்களுக்குமுன் அச்சிறுபான்மைச் சமூகத்தினரை எச்சரித்ததற்கும் இந்தியரை நாடுகடத்தும் சட்டம் விவாதிக்கப்பட்டபோது 'சேடைசி இந்தியன் இலங்கைக் கரையைவிட்டு வெளியேறும்பொழுது தான் நாம் நிம்மதியாக இருப்போம்' என்று றஸ்தவந்த பண மந்திரியின் அறைகூவுதலுக்கும், சோல்பரிக் கொம்மிஷன் வருவதற்கு முன் ஏதோ ஒருவிதமாய் சிறுபான்மையரை சிக்க வைக்கவேண்டுமென்று சென்றகிழமை அரசாங்கசபையில் மிஸ்டர் பொன்சேக்காவீசியமாயவலையாகிய சாம்ராஜ்யநாட்டுந்தஸ்தென்ற தீர்மானத்திற்குமே அகில இலங்கைக் காங்கிரஸ் தக்க பதிலளித்துள்ளது.

காங்கிரஸ் மகாநாட்டின் தீர்மானப்படி ஒரு தனிப்பட்ட சமூக ஆதிக்கமில்லாமற் செய்வதெப்படி? எதிர்கால அரசாங்கசபையில் பிரதிநிதித்துவ முறையை இதற்குத் தக்கபடி மாற்றியமைப்பதாலேயே. அப்படி பர... [illegible] ...யிற் சபை... [illegible] ...ந்தாற்றான பெரும்பான்மை வகுப்பாதிக்கத்தைத் தடுக்கமுடியும். இதற்கு உதாரணமாக ரஷ்யா, சுவிற்ஸலாந்து முதலிய நாடுகளின் அரசியலிலுள்ள சட்டசபை முறைகளை இலங்கையிலும் நாம் அங்கீகரிக்கலாம் என மகாநாட்டில் எடுத்துக் காட்டப்பட்டது.

ரஷ்யாவிலுள்ள சட்டசபை முறையென்ன? அங்கு இரு சட்டசபைகளுள்ளன. முதற் சபையிலே பொதுஜன வீதாசாரப்படி பிரதிநிதித்துவமளிக்கப்படுகிறது. ஒரு சபை மட்டுமிருந்தால், ரஷ்யாவிலுள்ள சிறிய சமூகத்தார்மீது, பெரும்பான்மையோராயுள்ள சமூகம் அரசியலாதிக்கத்தைப் பெற்றுவிடக்கூடுமென்று கருதி அதைத் தடுக்க, இரண்டாவது சபையில் ஒவ்வொரு சமூகத்தாருக்கும் சமமான பிரதிநிதித்துவம் அளித்துள்ளனர். அதாவது ஒரு சமூகம் எவ்வளவு ஜனத்தொகையிற் பெரிதாயிருப்பினும் அதற்கும் மற்றக் குறைந்த ஜனத்தொகையுள்ள சிறுபான்மைச் சமூகத்தினருக்கும் சமமான பிரதிநிதிகளேஉள். ஆகவே ரஷ்யாவில் சமபலபிரதிநிதித்துவமுமலை; அதுதவிடப்பலமான அரசியற்பாதுகாப்பைச் சிறுபான்மைச் சமூகங்களுக்குச் சட்டமூலம் ஏற்படுத்தியுள்ளார்கள். ஒரு பெரும்பான்மைச் சமூகம் மற்றச் சிறுபான்மைச் சமூகங்களைக் கொல்லாது தங்கள் ஜனத்தொகை காரணமாக ஒடுக்கப்படாதென்ற அவசியத்தை உணர்ந்தே இக்கொள்கை ரஷ்யாவில கையாளப்பட்டுள்ளது. இலங்கையிலும் சமபல பிரதிநிதித்துவம் கேட்பது ஒரு அநியாயமான வினைப்பமாகாது. அளவுகடந்த ஒருசுயநலம், சோல்பரிக்கொம்மிஷனர்கள் இங்கு வரும்பொழுது இந்த உண்மைகளைத் தமிழ காங்கிரஸ் எடுத்துப் புகட்டுவார்களென நம்புகின்றோம்.

# உலகம்பலிவிதக் கதை

(முற்றொடர்—28,

"குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர்
நண்ணினும் நண்ணுவர்"

விதர்ப்பநாட்டையடைந்த புயபலன் பசிப்பிணி வருத்த அங்குள்ள வீடுதோறுந் திரிந்து பிச்சையேற்று வயிறு வளர்ப்பானாயினன்; இப்படியிரந்து திரிந்தவன் ஒருநாள் இரவு தன் பசிக்கு உண்ணுதற்கு உணவில்லாமையினால் ஒரு வீட்டின் அடுக்களையுட் களவிற் புகுந்து உணவு திருடும்போது, வீடுடையவர் கண்டு பிடித்துக் கள்வனென்று நகர் காவலரிடம் ஒப்புவிக்கப்பட்டான்; நகர்காவலர் நீதியதிகாரிமுன் அவனைக் கொண்டுபோய் நிறுத்தினர்; நீதியதிகாரி விசாரணை செய்யவும் புயபலன் மௌனஞ் சாதித்தமையினால் அதிகாரி அவனைப் பெருந்திருடனென வெண்ணி அவனுடைய மாறுகால் மாறுகையைத் துணித்துவிடும்படி கட்டளையிடத் தண்டலாளர் அவனை நகர்ப்புறத்தே கொண்டுபோய் அப்படியே செய்தனர்; ஒருகாலும் ஒரு கையும் வெட்டுண்ணப்பெற்ற புயபலன், விதிவசத்தினால் இரணம் மாறப்பெற்று அங்கவீனனாய்ப் பின்னரும் அந்த நாட்டிலே இரந்துகொண்டு அலைந்து திரிந்தான்; இவன் நிலைமை இவ்வாறாக, இவனுடைய தேவியாகிய புதுப்பூங்கோதையைக் கதறக் கதற அந்த வேட்டுவன் கவர்ந்து போகும்போது, புலம்பும் அரவத்தைக் கேட்டு அந்த, மரக்கத்தில எதிர்ப்பட்டபுலியொன்று அவ்வேடன்மீது பாய்ந்து அவனைப்பற்றிக்கொண்டு போனது; வேடன் புலிவாய்ப்பட அவனிடத்திருந்து தப்பிய புதுப்பூங்கோதை அக்கொடிய காட்டின்கண்ணே தனித்தவளாய் அலைந்து திரிவாளாயினள்; ஐயா, அவளுடைய சுற்றின் மகத்துவத்தினாற்றான் அப்புலி அங்கே வந்ததென்றும் அவளைத் தப்ப வைத்து அந்த வேடனைமாத்திரம் கொன்றதென்றும் எண்ணுகின்றனர்; கொடிய கானகத்திலே தனித்தவளாகிய புதுப்பூங்கோதை தன் பொல்லா விதியை நினைந்து மனம் நொந்து அலைந்து திரிந்து ஈற்றில் அந்த விதர்ப்பநாட்டினையே வந்தடைந்தனள்; அவளும் பசிக்கொடுமையினால் ஒரு யாசகியாக அந்நாட்டிலுள்ள இல்லந்தோறும் இரந்து திரிந்தாள்; அவளும் ஒருநாளிரவு பசிப்பிணி வருத்த ஒரு மனைபுகுந்து உணவு திருடும்போது கண்டுபிடித்து நகர்காவலரிடமொப்புவிக்கப்பட, அவர்கள் நீதியதிகாரிமுன்னிலையிற்கொண்டுபோய் நிறுத்த, அவள் தனவரலாற்றை வெளியிடவாவது யாதும் பேசாமௌனமையினால் அதிகாரி அவளை நகரமுதலிய சில அங்கங்களைக் குறைக்கும்படி கட்டளையிடத் தண்டலாளர் அப்படியே செய்தனர்; அங்கபங்கமடைந்து நகர்ப்புறத்தே கிடந்து வேதனைமேலீட்டினால் வருந்திப் புலம்பலானாள்; சிலநாட்கள் செல்ல, இவளுடம்பிலுள்ள இரணமெல்லாம் ஒருவாறு மாறிவிட அவள் அங்கவீனத்தோடு பின்னரும் யாசகத்து திரிவாளாயினள். திரியும்போது தன் பழைய நிலைமையையெல்லாம் நினைந்து நினைந்து வருந்தினள்; "மாளிகையை விட்டுப் புறப்பட்டுப்போன சுசீல முனிவரை, நான் என் மூக்கல் திரும்பவிட்டுத் தமிழ் பரிகசித்தமையினாற்றான் என் நாசியையிழந்தேன்! எனக்கு இக்கதி நேர்ந்தது" என்று எண்ணிப் பச்சாத்தாபப்பட்டாள்.

"பூசவிலியநீறு
புன்மை தவிர்ப்பதுநீறு"

புயபலன் ஒருதினம் விதர்ப்ப நாட்டிலுள்ள பிரதான பட்டினத்தில் மறையவர் வசிக்கும் வீதியில் இரந்து திரியும்போது நல்விதி வசத்தினாற்போலும், சுசீல மறையவர் வாழும் வீட்டினையடைந்து "சாமீ, பசிக்கிறது, ஏதும் பிச்சைபிடுங்கள்" என்று இரந்தான்; அவனைச் சற்றுநேரம் உற்றுப் பார்த்த சுசீலர் "அப்பா, வங்கநாட்டைப் பரிபாலித்த புயபலன் நீதானு" என்று பரிவுடன் வினவுதலும், கேட்ட புயபலன் திடுக்குற்றான்; விபூதியை அவமதித்துத் தேவரீரை நிந்தித்து இந்தக் கதியடைந்த பாவியேன் நானுன்; பொறியிலியாகிய நான் என்னை அந்த நோத்திற பிடித்த அகந்தையினாற் செய்த பிழைபொறுத்தையும் பொறுத்து எனக்கருள் செய்ய வேண்டும்" என்று இரந்து அவருடைய பாதங்களில் அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கினன் புயபலன்; சுசீலர் அவன்மீது கருணைகூர்ந்து அவனுக்கு விபூதி வழங்க அவன் தன் ஒற்றைக்கையை நீட்டி அந்த விபூதியை ஏற்றுமுதல் நெற்றியிலும் பின் தன் மேனிபடங்களிலும் பூசினன்; உடனே திருவருளால் அவனுடைய வெட்டுண்ட கைமுங்காலும் பழையபடிகூடி, அவனைப் பிடித்த நோய் அறவே யகன்றுவிட அவன் பழைய அழ

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிமேலழகர்

சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் திரு. ராவ்ஸாஹெப். எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் பி. ஏ, பி. எல்.
சென்னை அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பியது

(முற்றொடர்)

இரண்டு பெருநூல்களுக்கு உரையெழுதினர் என்ற அளவில் இவரது தமிழ்த் தொண்டு முடிந்து விடவில்லை. சங்கத்தமிழ் வழங்காது நின்று போய் வெகுகாலமாகிவிட்டது. அதன் சிறப்பியல்புகளான இனிமை, தெளிவு, சுருக்கம், நேர்மை முதலிய பண்புகள் யாவும் பெரும்பான்மை இலக்கியங்களினின்றும் நீங்கிப் பல நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. இடைக்காலத் தமிழ் பிறந்து வடமொழிச் சொற்களும் வடமொழிக் காவிய மரபுகளும் தமிழிற் குடிபுகுந்தன. பல வேறு கலவியல்புகளும் தமிழில் வந்து அமைந்தன. ஆனால் அவற்றோடு சில தீய தன்மைகளும் புகுந்துவிட்டன. சுருக்கம், நேர்மை என்ற இயல்புகள் இரண்டும் ஒழிந்துபோயின; அலங்காரங்களும், ஆடம்பரங்களும் தலையெடுத்தன. வடசொற்கள் பெரும்பான்மை விரவித் தமிழ்ச்சொற்களை சிறுகுவிக்கத் தொடங்கின. இதனால் தமிழுக்கு இயற்கையாய் அமைந்த ஆற்றல் சிறுகலாயிற்று. நூற்பொருள் பெரும்பாலும் வடமொழிக்கு உரியனவாய் முடிந்தன. இதனால் தமிழ்க் கவிஞர்களின் புதுவதியற்றும் ஆற்றல் (inventive power) தடைபட்டுப் போயிற்று. இவ்விடையூறுகளையும் துணைக்கருவியாக மாற்றி வெற்றிகொண்டு கம்பன் மாகவியாய் விளங்கினனென்றால் அவனது பெருங்கவித்துவ சக்தியும், பேறும், பேராற்றலுமே அதற்குக் காரணமென்று சொல்லவேண்டும். கம்பன் போன்ற அபூர்வப் பிறவிகளைவிட்டுப் பொதுவே பரந்து கிடந்த இலக்கிய நிலையை எடுத்துக்கொள்வோமானால் முற்கூறிய தீய இயல்புகளே மலிந்து கிடந்தன. அக்காலத்துக் கல்வியாளர் சிலர் இந்நிலைக்கு வருந்தினர். தமிழின் பண்டைநிலையை உன்னியுன்னி அதனையடையத் திருப்ப எய்துவிக்கும் வழியென்று கருதலாயினர். சங்கத்தமிழுக்கு அதன் நன்முறையைக் கைப்பற்றிய பெருநூல்களை மீண்டும் பொதுமக்கள் பயின்றுகொள்ளும்படி செய்யவேண்டுமென்று எண்ணினர். அவற்றின் நலன்கள் தமிழில் மீண்டும் தழைக்கவேண்டுமென ஆசைகொண்டனர். இந்நோக்கங்களைக் கொண்டு கல்வியில் தலைசிறந்தோர் சிலர் உழைத்து வந்தனர். சங்கத்தமிழுக்கு மீட்சியியக்கம் (return to classicism) நிகழ்வதாயிற்று. இம்மீட்சியியக்கத்திற்கு அறிகுறியாக, சங்க இலக்கியங்களுக்கும் அவற்றையொத்த பெருமையுடைய பிறநூல்களுக்கும் செவ்விய உரைகள் எழுதப்பட்டன. இங்ஙனமாக மீட்சியியக்கத்தைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவர் பரிமேலழகர். 14, 15-ம் நூற்றாண்டுகளில் இவ்வியக்கம் முனைந்து நின்றதெனக் கொள்ளலாம்.

தாம் எடுத்துக்கொண்ட இரு பெருநூல்களுக்கும் உரையெழுதி விளக்குவதே தமது வாழ்வின் பெருநோக்கமாகப் பரிமேலழகர் கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு நூலும் அது தோன்றிய காலத்துள்ள சமுதாயநிலை, கல்விநிலை, மொழிநிலை முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டே இயற்றப்படுவதாகும். காலத்தை முற்றிலும் கடந்து விடுவதென்பது யாருக்கும் இயலாததாகும். வள்ளுவரும் காலநியதியைக் கடந்தவரல்லர். அவரது திருவுள்ளத்திலே உதித்த கருத்துக்களும் அவர் காலத்துள்ள சமுதாயம், கல்வி முதலியவற்றின் நிலைகளுக்குத் தக்கபடி அமைந்துள்ளதென்பது கூறவேண்டா. அவரது பாக்கப்பட்ட கல்வியும் அவர் நூலுக்குப் பயன்பட்டிருத்தல்வேண்டும். அன்றியும், அவரது நூலோடு ஒத்த தன்மையுள்ள பழைய நூல்களையும் அவர் நுனித்தறிந்து கொள்ளுவன கொண்டு தள்ளுவன தள்ளியிருத்தல் வேண்டும். ஆகவே, அவர் நூலுக்கு உரையியற்றுவோரும் அவர்காலத்துச் சமுதாயநிலை, கல்விநிலை, அவர் கற்றிருக்கக்கூடிய நூல்கள் முதலிய அனைத்தையும் நன்கறிந்து தம்மைத் தகுதியுடையராய் ஆக்கிக்கொள்ளுதல் அவசியம். அன்றியும், அவர் நூலை விளக்கவெழுந்த முன்னுரைகள் பலவற்றையும் ஆராய்தல் அவசியம். இவ்வாற்றாலெல்லாம் பரிமேலழகர் தம்மைத் தகுதியுடையராகச் செய்துகொண்டார் என்பதற்குத் தக்க சான்றுகள் அவருரையினிடத்தே காணப்படுகின்றன. மேலும் நூல் முழுவதையும் பலமுறை நுண்மையாகக்கற்று ஆழ்ந்து சிந்தித்து முன்பின் முரணாடு இன்றி ஒரு நோக்கில் வைத்து உறுப்பு நெறிப்படுத்தி (Systematise) ஆராய்ந்து வைத்திருக்கின்றனரென்பதும் நாம் உய்த்துணரலாம். இங்ஙனம் நெறிப்படுத்தியுணர்தல் வள்ளுவரது பெருநூலைப்பற்றியவளவில் மிகமிக இன்றியமையாததாம்.

குறட்பா ஒவ்வொன்றும் சூத்திரம்போல் அமைந்துள்ளது. சிறிய கண்ணாடியிற் பெரிய உருவம் முதலியவற்றின் சாயை செவ்வையாகச் செறிந்து இனிதாக விளங்கும். அதுபோலச் சில எழுத்துக்களால் அமைந்த யாப்பிலே பலவகைப்பட்ட பொருள்களும் செவ்வையாகச் செறிந்து இனிது விளங்குமாறு இயற்றுவதே சூத்திரமாகும். இதிற் பல பொருள்களின் திண்மையும் நுண்மையும் சிறந்து தோன்றும்.

இங்ஙனம் அமைந்த குறட்பாக்களின் தன்மையைப் பரிமேலழகர் பல முகமாய் ஆராய்ந்துணர்ந்து பொருளின் நுட்பத்தையும் திட்பத்தையும் நன்கு விளக்கியுள்ளார்.

ஓர் உதாரணம் காட்டுகிறேன். அமைச்சர்களைப் பலவகையிற் பரிசோதனைசெய்து அரசர்கள் தெரிந்தெடுக்கவேண்டுமென்று வள்ளுவர் கூறுகிறார். அவைகளை,

அறம்பொருளின்பம் உயிர்ச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப்படும்

என்ற குறளிற் குறிப்பிடுகிறார். இதனை மாத்திரம் எடுத்துக்கொண்டால் பொருள் விளங்கமாட்டாது. இங்ஙனமே இக்குறிப்பிற்குரிய மூலம் தெரியாமற் போனாலும் அதன் பொருள் புலப்படமாட்டாது. மணக்குடவர், 'அறமும், பொருளும் இன்பமும் உயிரச்சமும் என்னும் நான்கின் கூறுபாட்டினையும் ஆராய்ந்து, ஆராய்ந்த பின்பு ஒருவனை அரசனால் தெளியப்படுவான். முன்பு நான்கு பொருளையும் ஆராயவேண்டுமென்றார்; பின்பு தேறப்படுமென்கிறார்' என உரையெழுதினர். இதனால் பொருள் சிறிதும் விளக்கம்பெறவில்லை. குறளின் மூலம் இன்னதென்பதை இவ்வுரைகாரர் உணர்ந்துகொள்ளவில்லையென்பது தெளிவு. பரிமேலழகர் மூலம் இன்னதென்பதனைத் தெரிந்து உரைவகுத்துள்ளார்.* சாணக்கியரது அர்த்த சாஸ்திரத்தில் இவ்விஷயம் விரிவாகக் கூறப்பட்டுளது. இந்நூலினை நோக்கி விஷயத்தை நன்குணர்ந்து விளக்கமாய்ப் பொருளெழுதியுளார். உரையை நோக்கிய அளவில் இதுவே உண்மையான பொருள் என்பதை யாவரும் ஒப்புவர்.

இங்ஙனம் கூறுவதனால் பரிமேலழகருரை ஓரிடத்தும் வழுவியதில்லையென்று கருதலாகாது. தவறுதல் என்பது மக்கட்பிறப்புக்கு இயல்பாகவுள்ளது. ஆனால் அவருரையைப் பிழையென்று சொல்லுவது எளிதன்று; பலமுறை, பலமுகமாக ஆராய்ந்த பின்னரே பிழையிருக்கலாமோவென்று ஐயுறலாம். அப்போதும் ஒருதலையாகத் துணிய முடியாத நிலையும் ஏற்படலாம்.

பரிமேலழகரது தெளிந்த பேரறிவும் ஆராய்ச்சித் திட்பமும் மிகப்பரந்த கலவியும் மொழித்திறமும் நோக்கி உமாபதி சிவாசாரியர் என்ற சைவப் பெரியார்,

வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்

என்று வாயாரப் புகழ்ந்தனர். தெய்வப்புலமைத் திருவள்ளுவரோடு ஒருங்கு வைத்தெண்ணப்படும் பெருமையுடையார் பரிமேலழகர் என்பதைக் காட்டிலும் சிறந்த புகழ் உண்டோ.

—செந்தமிழ்

---

*"அறவுபதையாவது:— புரோகிதரையும் அறவோரையும் விட்டு, அவரால், 'இவ்வரசன் அறவோனன்மையின் இவனைப்போக்கி அறனும் உரிமையும் உடையானொருவனை வைத்தற்கெண்ணினம், இதுதான் யாவர்க்குமியைந்தது, நின்கருத்தென்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல், பொருளுபதையாவது:- சேனைத் தலைவனையும் அவனோடியைந்தாரையும்விட்டு அவரான் 'இவ்வரசன் இவறன் மாலையனாகலின் இவனைப் போக்கிக் கொடையும் உரிமையும் உடையானொருவனை வைத்தற்கெண்ணினம், இதுதான் யாவர்க்குமியைந்தது, நின் கருத்தென்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்பவுபதையாவது:—தொன்றுதொட்டு உரிமையோடு பயின்றாளொரு தவமுதுமகளைவிட்டு, அவளால், 'உரிமையுள் இன்னாள் நின்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்கவேண்டுமென்று என்னை விடுத்தாள். அவளைக் கூடுவையாயின் நினக்கு பேரின்பமேயன்றிப் பெரும்பொருளும் கைகூடும்' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் எல்லோரையும் அவனில்லின்கண் அழைப்பித்து, இவர் அறைபோய் மன்னனைக் கொல்லச் சூழ்கின்றாரென்று தான் காவல ரெய்து, ஒருவனால், 'இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அவனை நாம் முற்படச் செய்து நமக்கினியவனொருவனை வைத்தல் இனைவர் யாவர்க்கும் இயைந்தது. நின் கருத்தென்னை?' எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந்நான்கனுள் திரிபிலனாயவழி எதிர்காலத்துந் திரியலனென்க கருத்து. அவையாற்றை அறிவிப்பதுமென்பதாம். இவ் வடநூற்பொருளுண்மையைக் கொண்டு இவ்வாறுரைத்தறியாத பிறரெல்லாம் இதனை உயிரச்சமெனப் பாடந்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே யுரைத்தார்."

## தாயினும் நல்லன் நற்றாழ் சடையோன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நம் இறைவன் 'தாயினும் நல்லன்' என்பதை மறக்கவும் முடியுமா.

ஆன்மாக்களாகிய யாம் ஆணவ முனைப்பால் மீட்டும் மீட்டு பாவங்களைப் புரிந்தும் மன்னுயிரைத் தன் உயிர்போல மதியாதும் பிறந்திறந்துழலும் போது தாயினும் இனியனாய எந்தை எம்மேல் இரங்கி நமக்கு வேதாகமங்களைத் தந்துதவியும் நல்வழிகளைக் காட்டி உதவியும் பலவித தண்டனைகளைச் செய்து இடருறுத்தும் குருவடிவந்தாங்கி நம்முன்வந்து நற்புத்தி புகட்டியும் பிறப்பை அறுத்துப் பிறவாநெறியை அடையும்படிவும் எம் இறைவன் "பால்நினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப் பிரியன்" அல்லவா

"மன்னவன்தன் மகன்வேடர் இடத்தே தங்கி
வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்ப
பின்னவனும் என்மகன்நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணுமாபோல்
தன்னிடஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறுந் தொல்லுயிரை
மன்னும் அருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலம் அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்"

எனவருஞ் சிவஞானசித்தியார் திருவிருத்தப் பாவால் மேற்கூறியவை வற்புறுத்தப்பட்டமை காண்க.

இற்றைக்குச் சில ஆண்டுகட்கு முன் யான் மாதகலைப் பகுதியில் அரசினர் பாடசாலை ஒன்றில் ஆசிரியனாய்க் கடமை புரிந்துவரும் காலத்தில் ஓர்நாள் பிற்பகல் ஐந்து மணியளவில் உடுகமம் என்றழைக்கப்படும் ஓர் நாட்டில் வசிக்கும் கிராமத் தலைவர் ஒருவரைக் காணவேண்டிய விசேஷகாரணத்தோடு ஆங்குச் சென்றனன். யான் சென்ற பாதை வயல்களூடாகவே அமைந்துள்ளது. யான் சென்று அவ்வதிகாரியைச் சந்தித்துவிட்டுத் திரும்பி வரும்போது பாதையைத் தவறவிட்டேன். இராப் பன்னிரண்டு மணியளவில், இப்பிலந்தணை என்னும் கிராமத்து ஓரமாயுள்ள வயல் வரம்பொன்றில் நடப்பதை அறிந்தேன். அப்போது ஓர் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது யானை ஒன்று மரங்களை முறிப்பதைக் கண்டேன். பயம் உண்டானது. யான் எனது உபாசனா மூர்த்தியைத் தியானித்துக்கொண்டு சிவபுராணத்தைத் தோத்திரஞ்செய்துகொண்டு நின்றபோது யானை அசையுஞ் சப்தம் என் காதிற்பட்டது. திரும்பிப் பார்த்தனன். அப்போது யானை, யான் நின்ற திசையை நோக்கி வருவதைக் கண்டேன். "தறிசெறி களிறும் அஞ்சேன்" என்ற திருவாசகம் என் ஞாபகத்திற்கு வர அதை ஓதிக்கொண்டு நின்றேன். சிறிது நேரத்தின்பின் என்ன செய்தேன்; யாது நிகழ்ந்தது என்பன ஆதிய எவையும் எனக்குத் தெரியாது. எனக்குச் சுயவுணர்வு ஏற்பட்டபோது எனக்கு முன் ஒருவர் நிற்பதைக் கண்டேன். அவர் என்னைப்பார்த்து யோ இங்கு ஏன் வந்தாய் என்னுடன் வா உன்னைப் பாடசாலைக்கு அழைத்துச்செல்லுகிறேன் வழி காட்டுகின்றேன் என்று சொல்லி மிக வேகமாக நடந்தனர். யானும் அவர்பின்சென்றேன். ...

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

கிய கோலத்துடன் காணப்பட்டான்; எல்லையில்லா ஆனந்தமடைந்தான்; விபூதியின் மகத்துவத்தையும் அந்த விபூதியைத் தனக்கு வழங்கிய சுசீலருடைய தவத்தின் திறத்தையும் தெய்வத்தின் திருவருள் மாண்பையும் பாராட்டினான்; நினைந்து நினைந்து உள்ளம் உருகினான்; சுசீலரைப் பலமுறை பணிந்தான்; அந்நிலையில் அவன் நிற்கும்போது, கண்டவர் அருவருக்கக்கூடிய அங்கபங்கப்பட்ட யாசகியொருத்தி அங்கே வருதலை இருவரும் கண்டார்கள்; வந்தவள் புயபலனைக் கண்டமாத்திரத்தே, அலறிக்கொண்டு அவன் கால்களில் வீழ்ந்து "என் நாதா" என்று ஓலமிட, அவன் அவளை இன்னாளென அறியானாய் ஒதுங்கி நின்று "நீ யார்" என்று கேட்க, "என் பிராணநாதரே, அடியாள் உமது பட்டத்துத் தேவியாயிருந்த புஷ்பாங்கோதை" யென்று மொழிந்தனள். "நீ செய்த பிழையென்ன" என்று அச்சத்தோடும் ஆச்சரியத்தோடும் கூடியவனாய்ப் புயபலன் வினவ, அவள் தான்செய்த பிழையையெடுத்துக் கூறினாள்; புயபலன் பரிவுகொண்டானாய்ச் சுசீலரைப் பணிந்து "சுவாமி, இந்தப் பெண் பேதை அறியாமையினால் தேவரீருக்குச் செய்த அபராதத்தைப் பொறுத்து இவளுக்கு விபூதி வழங்குதல் வேண்டும்" என்றிரந்தான்; சுசீலர் அப்படியே அவளுக்கும் திருநீறு கொடுக்க, அவள் ஏற்றுப் பூசித் தன் அங்கக் குறையெல்லாம் நீங்கித் தொன்மைபோற் பேரழகுடன் விளங்கினாள்; "ஐயா, பூசவினியது நீறு, புன்மை தவிர்ப்பது நீறு, என்று பெரியோர் புகழ்ந்தது பொய்யாகுமா" என்று இரஞ்சிதம் இடையிற்சொல்ல, கேட்ட விசுவநாதனும் அது நிசந்தான்" என்றான்; பின்னரும் இரஞ்சிதம் விசுவநாதனைப் பார்த்துச் சொல்லுகின்றாள்:-

### புயபலன் மீட்சி

சுசீலமுனிவர் இப்படியான அற்புதத்தைச் செய்தாரென்று கேள்வியுற்றவுடனே, அப்பட்டினத்திலுள்ள சனங்களெல்லாரும் அங்கே வந்து சுசீலரை வணங்கி, அம்மறையவருடைய அருளைப்பெற்ற அரசனையும் அரசியையும் கண்டு ஆச்சரியமடைந்து சுசீலரின் சிவபக்தித் திறத்தைப் பாராட்டினார்கள்; சிலர் விரைந்துசென்று அந்த அற்புதத்தைத் தங்கள் அரசனுக்குச் சொல்ல, உடனே விதர்ப்பநாட்டரசனும் தன் தேவியுடன் அங்கே வந்து சேர்ந்து அற்புதமனைத்தையும் நேரிற்கண்டு அதிசயமடைந்து சுசீலரை வணங்கினான்; புயபலனும் தேவியும் அங்கே நிற்கக் கண்ட விதர்ப்பன சுசீலரை மீட்டும் வணங்கி, "சுவாமி, இந்த அரசன் என் மைத்துனனாவன்; இவன் தன் நாடுநகரிழந்து தேவியுடன் கானகம் புகுந்தனனென்பதைக் கேள்வியுற்று இவ்விருவரையும் தேடிக் கண்டு அழைத்து வரும்படி என் ஏவலர் பலரை அனுப்பினேன். ஆனால் அவர்கள் பல இடங்களிற் சென்று சென்று தேடியும் இவர்களைக் காணாது மீண்டு வந்தனர்; யான் அதனால் கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன்; உமது அருட்கடாட்சத்தால் இவர்களை இங்கே காணப்பெற்றேன்; நான் ஆளும் இந்த நாட்டிலே, சுவாமி, நீர் இருப்பதும், உமது பெருமையை அறியாது யானோ இதுகாறும் இருந்து காலங்கழித்தேனே; என் அறியாமை இருந்தபடி யென்னே" என்று சொல்லி மீட்டும் விதர்ப்பராசன் தேவியுடன் சுசீலரை வணங்க, அவர் அவ்விருவருக்கும் விபூதி வழங்கி ஆசிகூறினர். பின்னர் விதர்ப்பநாட்டரசன் புயபலனுடன் உறவுமுறை பாராட்டினான்; அவனையும் தேவியையும் தன் மாளிகைக்கு வரும்படி அழைத்தான்; புயபலனும் தேவியும் விதர்ப்பராசனும் அவன் தேவியும் சுசீலரிடம் விடைபெற்றபின், விதர்ப்பர்கோனும் தேவியும் புயபலனையும் புஷ்பாங்கோதையையும் தங்கள் மாளிகைக்கு உபசாரத்தோடு அழைத்துச் சென்றனர். அங்கே சிலநாள் புயபலனும் தேவியும் வைகினர். பின்னர் விதர்ப்பர்கோன் உதவிய நால்வகைச் சேனையைத் துணையாகக்கொண்டு புயபலன் தன்னாட்டிற்குத் தேவியுடன் மீண்டு, தன்னாட்டைக் கவர்ந்த குறுநில மன்னரை வென்று தொன்மைபோல் நீதிவழுவாது அரசாண்டானென்பதுதானையா, புஷ்பாங்கோதையின் சுருக்கவரலாறு" என்று இரஞ்சிதம் விசுவநாதனுக்குக் கூறி முடித்தாள்; விசுவநாதனும் கேட்டு அற்புதமடைந்தான்.

### "நானுன் குறிப்பறிய மாட்டாதவனா."

"ஐயா, கதையை அதிகம் விரித்துச்சொல்லுவதாலாவதென்ன, அந்தப் பட்டிக்காட்டுச் சமுதாயத்தை நான் விட்டு விலகிவந்ததற்குப் பிரதான காரணராயிருந்தவர் அக்கேசவமுதலியார்தான்; அதன் பின்னரும் ஒருதினம், பொழுதுபட்டபின்னர் அஞ்சுகத்தக்காள் இல்லாத சமயம் பார்த்து நான் இருக்கும் அறையுள் வந்தார்; வந்தவரை நாம் உபசரிக்கவேண்டுந்தானேயென்ற முறைப்படி அந்த அறையுளிருக்கும் ஒரு ஸோபாவில் இருக்கச்செய்து ஒதுங்கி நின்றேன்; இருந்த முதலியார் சற்றுநேரம் யோசித்துவிட்டு என்னைப் பார்த்து "இரஞ்சிதம், உம்மால் எனது சமுதாயத்திற்கு அதிக லாபமுண்டு; அதற்காக உமக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்; உமக்கு வேதனம் இன்னமும் அதிகமாக உயர்த்தித் தருவதாக உத்தேசித்திருக்கிறேன்; என் கணக்கில் சில சம்மானமும் உமக்குச் செய்ய விரும்புகிறேன்; அதனை நீர் மறுக்காமல் ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு தம் சட்டைப் பைக்குள் கையை விட்டு ஒரு காகிதவுறையுட் பொதிந்திருந்த முத்துமாலையொன்றை எடுத்து, என்னை ஏற்றுக்கொள்ளும்படி நீட்டினார்; பெரிய மனுஷன் நீட்டுவதை உடனே மறுப்பது சரியல்ல என எண்ணி நான் இரு கையையும் நீட்டிப் பணிவுடன் வாங்கிக்கொண்டு "ஐயா, இந்த மாலையை அஞ்சுகத்தக்காள் வந்த பின் அவரிடம் கொடுப்பதா" என்றும் வணக்கமாகவே கேட்டேன்; "இரஞ்சிதம் அது அஞ்சுகத்திற்கல்ல, உமக்கெனவே கொண்டுவந்தேன்; அவளில்லாத சமயத்தால் உமக்கு ஆனந்தத்தோடு வழங்குகிறேன்; [illegible] நான் அன்புடன் தந்ததை ஏற்றுக்கொள்வதற்குத் தடையில்லை" என்று இதமாகச் சொன்னார்; "ஐயா, நீங்கள் எனக்கு இந்த முத்தாரத்தை அன்புடன் தருகிறீர்களென்பது நிசமாயிருக்கலாம்; ஆனால் நான் இதனை அணிவதற்கு உரியவளல்லேன்; அல்லாமலும் ஐயா, இதனை நீங்கள் எனக்குத் தருவதால் [illegible] யான [illegible] காளுக்கே உள்ளதைச் சொல்லிச் சன்மானமாகக் கொடுப்பேன் என்று சொல்ல முதலியார் திடுக்குற்று ஏக்கங் கொண்டார்; சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டுப் பின்னர் என்னை நோக்கி "இரஞ்சிதம், உமக்கென நான் தருவதை நீர் அவளுக்குக் கொடுப்பேனென்று சொல்வதனால் என்மனம் வருந்துமென்பதை நீர் உணரவில்லையா" என இதமாகக் கேட்க, அப்படி உங்கள் மனம் வருந்துமெனக்கண்டால் நீங்களே இதனை மீட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லி என் கையிலிருந்த முத்துமாலையை நீட்டினேன்; நீட்டிய முத்துமாலையை முதலியார் வாங்காது மறுத்துவிட்டு என்னைப் பார்த்து 'என்ன? இரஞ்சிதம், நீ ஒன்றுமறியாப் பேதைபோல நடிக்கிறாய்? நான் இந்நேரத்தில் இங்கு வந்ததேனோ என்ன வென்பது உள்ளபடி உனக்குப் புலப்படவில்லையா? என்றுன் குறிப்பறிய மாட்டாதவன் நானென்பதைப் [illegible] உமக்குச் சொன்னால் பொருந்துமோ [illegible]" என்று சிறிது அதிகாரத்தோடு பேசினார். ஐயா, ஏதோ பேசுகிறீர்களென்று [illegible]; பெண்ணாகப் பிறந்த நான் குடும்பத்திற்கு நடக்கவேண்டியது கணவன் விஷயத்திலேதான்; அதுபற்றியே [illegible] குடும்பமானவள் பெண்டாட்டியென்று சொல்லப்பட்டிருக்கிறது; அப்படிக் குடும்பம் நடக்கிறதற்கு எனக்குக் கணவன் இல்லை.... என்று நான் சொல்லி முடிப்பதற்கிடையில், முதலியார் "என்னையே உன் கணவனாக மதித்து இன்று தொடக்கம் [illegible]; இரஞ்சிதம்! உனக்குச் சகல நன்மைகளும் உண்டாகும்" என்று சொல்லி முப்பத்திரண்டு பற்களையுங்காட்டி இளித்தார்; கேட்டதும், இருகாதுகளையும் பொத்திக்கொண்டு "ஐயா, அபசாரம்! உமது செய்கை காவலுக்கிட்ட வேலி பயிரை மேய்ந்தது போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு, மெல்ல அறையைவிட்டு வெளியே வர முயன்றேன்; அதனைக் கண்ட முதலியார் இடைவாசலிலே வந்துநின்று என்னை வெளியேபோகவொட்டாது தடுத்தார்.

(வரும்)


யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையார்

## பாலபாடங்கள்

இச்சபையார் பாலபாடங்களுட் சிறுபிள்ளைப் பாடமும், முதற் பாலபாடமும் முக்கிய விலையைக்காட்டிலும் பிரதியொன்றுக்கு 5 சதவிகிதம் உயர்த்திப் பிரதிகள் தனித்தனி 30 சதமாக விற்கப்படும்.

மனேஜர்.



## தேவை

வடமராட்சி ஐக்கிய பண்டசாலைச் சமாஜ மொத்த ஸ்தாபனங்களுக்குத் தேவை.

1 ஆங்கிலம்படித்த லிகிதர்.
2 மனேஜர்கள்: மாதம் ரூபா 75 சம்பளம்; ரொக்கப்பிணை ரூபா 1000
3 விறகு ஸ்டோர் மனேஜர் ரூபா 35 சம்பளம் ரொக்கப்பிணை ரூபா 1000
4 விற்பனவுகாரர்.
5 பெரிய தராசுகளும் படிகளும்.

N. B விண்ணப்பங்கள் டிசம்பர் மீ 9ந் திகதிக்கிடையில் சேரவேண்டும்.

இங்ஙனம்
ஆ. நா. வேலாயுதம்
ஐ. சமாஜக் காரியதரிசி
வல்வெட்டித்துறை

Mis 164 30 11 44


# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### வெள்ளி டிசம் 1

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி கே ரங்கநாதன் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி கே ரங்கநாதன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 திருவாரூர் எம் கே கமலாம்பாள் பாட்டு 5-40 தான்-ஷரீப் 6 திருவிழிமிழலை வி மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 6 30 ஆங்கிலத்தில் செய்திகள் 6 40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 உணவுப்பெருக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 முன்னேற்றம் 7-45 தமிழில்செய்திகள் 8 திருவிழிமிழலை வி மீனாக்ஷிசுந்தரம் நாகஸ்வரம் 8 45 திருவாரூர் எம் கே கமலாம்பாள் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-54 உலகவிவகாரங்கள் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### சனி டிசம் 2

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 கே பி சுந்தராம்பாள் † 8 15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 காலை இசை † 9 முடிவு.

1 எஸ் ராமசுப்பையர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஐரோப்பிய சங்கீதம் 2 தமிழில் செய்திகள் 2 05 எம் எஸ் நடராசபாகவதர் பாட்டு 2-30 முடிவு.

மாலை 5 எஸ் ராமசுப்பையர் வயலின் 5-40 சுந்தரர் தேவார விளக்கம் 6 எம் எஸ் நடராஜபாகவதர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 வெற்றிக்கு சேவை 7-30 அறிவிப்புகள் 7-35 டாக்கிஇசை † 7-45 தமிழில் செய்திகள் 8 மதராஸிலுள்ளபடி மொக்கா ஸ்ரீராமமூர்த்தி பாட்டு 9-15 என் கேசி புல்லாங்குழல் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 தஞ்சை இசைச்சித்திரம் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### ஞாயிறு டிசம் 3

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 வீணை தனம்மாள் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 நகைக்கதம்பம் † 9 முடிவு.

12 கண்ணகி † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாதர் பக்கம் 2 தமிழில் செய்திகள் 2-05 இசைவகை † 2-30 முடிவு.

மாலை 5 கே கல்பகம் பாட்டு 5-40 தேவாரத்தேன் 6 ஆர் பத்மநாபையர் புல்லாங்குழல் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 கூட்டு வாழ்க்கை 7-30 அறிவிப்புகள் 7-35 திரை இசை † 7 45 தமிழில் செய்திகள் 8 ஆர் பத்மநாப ஐயர் புல்லாங்குழல் 8-30 கே கல்பகம் பாட்டு 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 வீணை தில்ருபா 10 நாட்டுப்பாடல்கள் 5 10-20 டி சூர்யகுமாரி 10-30 முடிவு.

### திங்கள் டிசம் 4

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 பாரதநாடக கீர்த்தனை 7 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருச்சேறை கலியாணசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் ஆர் வாசவாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 திருச்சேறை கலியாணசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 5-40 இசைப் பயிற்சி 6 எம் ஆர் வாசவாம்பாள் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 சூடாமணி † 7-30 அறிவிப்புகள் 7-35 செய்திச் சித்திரம் 7-45 தமிழில் செய்திகள் 8 எம் கே தியாகராஜபாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 சுதந்தரத்தின் அஸ்திவாரம் 10-05 இசைக்கதம்பம் 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் காங்கிரஸ் மகாநாடு நிறைவேற்றிய தீர்மானங்கள்

அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் மகாநாட்டுத் தீர்மானங்களின் விபரங்களாவன:-

'எந்த ஒரு தனிப்பட்ட சமூகமும் மற்ற சமூகங்கள்மீது ஆதிக்கம் செலுத்த முடியாத கொள்கையை அடிப்படையாகக் கொண்ட சுய ராஜ்யத்தைப் பெறுவதற்கு உழைக்குமாறு இலங்கைவாழ் தமிழர்கள் எல்லோரையும் அகில இலங்கை தமிழர் காங்கிரஸ் கேட்டுக்கொள்கிறது.'

'தமிழர்களின் ஐக்கிய பாவத்தையும் பிரிக்க முடியாத தன்மையையும் இந்தகாங்கிரஸ் அங்கீகரிக்கிறது. தமிழர்களைப் பிளவுபடுத்தி, அவர்களைச் சிறு சிறு பிரிவினர்களாகவும் குழுவினர்களாகவும் இருக்கச் செய்யப்படும் முயற்சிகளை இக்காங்கிரஸ் கண்டிக்கிறது. மேலும் இது, தமிழர் சமுதாய மேன்மைக்குமே உழைத்து வரும் என்று உறுதி கூறுகிறது.'

திட்டமான அரசியல் கட்சிகளையுடைய நாட்டிலேயே பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறையைத் தழுவிய ஆட்சி முறை சாத்தியம். இலங்கையானது தற்போதைய அரசியல் ஒரு வகுப்பினருக்கு அதிகாரத்தைக் கொடுத்து அவ்வகுப்பினர் யதேச்சாதிகாரம் செலுத்த இடமளித்துள்ளது. இதர வகுப்புகளின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. எனவே அடுத்துவரும் அரசியல் சமபலப் பிரதிநிதித்துவக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்.

'இந்திய மக்களுக்கும் இத்தீவிலுள்ள ஜனங்களுக்கும் பலவிதமான தொடர்புகளிருந்து வருகின்றன. இவ்விரு நாடுகளும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்ந்து வருகின்றன. இந்த நாட்டின் வளர்ச்சிக்காக முன்பும் இப்போதும் இங்கு வதியும் இந்தியர் மதிப்பிடமுடியாத உதவிகளைச் செய்து வந்திருக்கின்றனர். எனவே, இலங்கைவாழ் இந்தியர்கட்கு அரசியல் பிரஜா உரிமை விஷயமாகவும் சரிசமத்துவமான அந்தஸ்து அளிக்கப்படவேண்டும். சட்டபூர்வமாகவும் நிர்வாக சம்பந்தமாகவும் இந்தியர்களின் நலத்தைப் பாதிக்கக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும் ஒருதலைபட்சமான சகல சட்ட நடவடிக்கைகளும் ரத்து செய்யப்பட வேண்டுமென்று இக் காங்கிரஸ் கோருகிறது.'

'ஜாதி குலம் இவைகளை ஆதாரமாகக் கொண்டு தமிழர்களுக்குள் வித்தியாசம் பாராட்டப்படுவதை இக்காங்கிரஸ் கண்டிக்கிறது. எல்லா சமூக மக்களும் தாங்கள் எப்பிரிவைச் சேர்ந்தவராக இருப்பினும் அவர்களுக்கும் சரிசமத்துவமான பிரஜா உரிமைகளும் ராஜிய உரிமைகளும் இருக்க வேண்டும். இக்கொள்கை நிறைவேறுவதன் பொருட்டும் காங்கிரஸ் உழைத்துவரும் என்று உறுதி கூறுகிறது.'

சோல்பரி கமிஷனை மனப்பூர்வமாக வரவேற்று அதன் விசாரணையில் ஒத்துழைக்க வேண்டும். பிரிட்டிஷ் காபினெட் ஆட்சிமுறை இலங்கைக்குப் பொருத்தமற்றதென காங்கிரஸ் கருதுகிறது. உதவி மந்திரிகளை நியமிக்கும் யோசனையை காங்கிரஸ் கண்டிக்கிறது. இரண்டாவது சட்டசபையை ஏற்படுத்துவதனால் மட்டும் ஒரு வகுப்பு ஆதிக்கம் தடைபட்டுவிட முடியாது. புதிய சட்டசபையில் நியமன ஸ்தானங்கள் கூடாது. பொதுத் தேர்தலில் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்க முடியாத வகுப்புகளுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை ஒழுங்கு செய்யப்படவேண்டும்; சுதந்திர பப்ளிக் சர்விஸ் கமிஷன் ஒன்று ஏற்படவேண்டும். தேசாதிபதியின் விசேஷாதிகாரங்கள் தொடர்ந்து இருந்துவர வேண்டும்.

அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமான அரசாங்கசபைத் தீர்மானங்களுக்கு தமிழ்ச் சமூகம் கட்டுப்பட்டதல்ல, அரசாங்கசபையின் தீர்மானங்களை தேசமக்களின் தீர்மானங்களாக மதிக்கக்கூடாதென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தை காங்கிரஸ் எச்சரிக்கிறது. தமிழ்ப் பாஷையையும் தமிழ்க் கலாசாரத்தையும் நசுக்கும் முயற்சியை காங்கிரஸ் அழுத்தமாகக் கண்டிப்பதோடு இதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் காரியகமிட்டிக்கு அதிகாரமளிக்கிறது.

சோல்பரி கமிஷனிடம் தமிழர் சார்பாக ஒரு ஞாபகக்குறிப்பை இட்டுச் சென்று விஞ்ஞாபனம் செய்து கொள்ளவும் காங்கிரஸின் இலட்சியங்களை நிறைவேற்றி வைக்கவும் தலைவருக்கு அதிகாரமளிக்கப்பட்டதாக தெரிகிறது.

## ரயில்வே ஸ்டேஷனில் அகாலநேரத்தில் காணப்பட்டவராம்

இங்குள்ள கீழ் நீதிஸ்தலத்தில் திரு. அலெக்ஸ் நூன்பாக கந்தையா இராசு என்பவர்மீது கடந்த அக்டோபர்மாதம் 28ந் தேதியளவில் யாழ்ப்பாணம் ரெயில்வே ஸ்டேஷன் கட்டிடத்துள் அகாலமான நேரத்தில் காணப்பட்டதாகவும் போதிய நியாயம் காட்டாதிருந்ததாகவும் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் டப்ளியூ. ஏ. அப்பக்கோனால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி பின்வருமாறு தீர்ப்புக் கூறினார்:-

'எனக்கு முன்பாகக் கூறப்பட்ட சாட்சியங்களிலிருந்து எதிரியைக் குற்றவாளியென்று என்னால் கூற முடியாது. தனிச் சாட்சி எதிரியை ரெயில்வே ஸ்டேஷன் கட்டிடத்துள் வர உத்தரவு கொடுத்திருக்கிறார். அவர் ரெயில்வே ஸ்டேஷனில் வேலை பார்ப்பவர். நீதிஸ்தலத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆயுதத்தினால் பூட்டுக்களைத் திறக்க முடியும், ஆனால் அவ்வாயுதத்தினால் பெரிய களவுகள் நடைபெறமாட்டாது. போலீசார் நீதிஸ்தலத்தில் சந்தேகத்திற்கிடமான மதிப்புக் கூறியிருக்க முடியாது. நீண்ட யோசனை செய்யுமிடத்து ரெயில்வே ஸ்டேஷனில் களவுகள் போன்ற தமது மேற்பார்வை உடைமையாக வருகிறபடியால் சந்தேகத்திற்கு இடமிருக்கின்றது. ஆகையால் எதிரியை விடுதலை செய்கின்றேன்.

## தேகவியோகம்

கீழ்கரவை உத்தம சைவ வேளாண் குலதிலகரும் அரசாங்க சேவைசெய்து இளைப்பாறி உபகார வேதனம் பெறுபவரும் கரவை சாஸ்வத வித்தியாலயத் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி பொன்னுச்சி அம்மை அவர்களினதும் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த தமிழ் வித்தியாலய ஆசிரியை ஸ்ரீமதி பதஞ்சலி அவர்களினதும் அரிய பிதாவும் சிவத்தொண்டு தமிழ்த்தொண்டுகளை மிகுதியாகச் செய்து வந்தவருமாகிய ஸ்ரீலஸ்ரீ சின்னத்தம்பியார் முருகப்பர் அவர்கள் இம்மாதம் ஒன்பதாந் திகதி இரவு நடுச்சாமத்தில் (24.11-44) இவ்வுலகவாழ்வு விட்டு சிவபதமடைந்தனர்.

## தாயினும் நல்லர் நற்றாழ் சடையோன்

4-ம் பக்கத் தொடர்ச்சி

இரண்டு மைல் தூரம் சென்றபின் பாதை ஒரு அளவிற்கு எனக்குத் தெரியவந்தது. அப்போது வழிகாட்டிய பெரியார் மறைந்துவிட்டார். பின் யான் இரா இரண்டு மணியளவில் என் இருப்பிடம் போய்ச் சேர்ந்தேன். இறைவன் "ஆபத் சகாயர்" என்பது பொய்க்குமா. தாயினும் நல்லனாகிய இறைவனாயினும் சடையனை என்னையும் பொருளாய்மதித்து வழிகாட்டி மறைந்த நற்காட்சி மறக்கவும் முடியுமா. யாம் அல்லும் பகலும் இறைவனைக் கள்ளமற்ற சிந்தையுடன் வணங்கவேண்டும். ஆலயங்களில் சென்று வணங்கும்போது கடவுளை வியாபாரமாகப் பாவித்துவணங்கலாகாது. தாயானவள் பிள்ளையினிடத்துக் காரணங் கருதாதும் பிரதி உபகாரம் விரும்பாதும் வைக்கும் அன்பு போலவே நாமும் பிரதிஉபகாரம் விரும்பாது அன்பு வைக்கவேண்டும், நாம் ஆலயங்களில் இம்மைப்பயனைக் கருதி வணங்கலாகாது. வழிபாட்டுப் பிரகாரம் வர இருப்பன இறைவனால் தரப்படும். இறைவன் தாயினும் நல்லன். அதற்கேற்ற பண்பு நம்மிடத்தமையவேண்டும்.

'போகம் வேண்டி வேண்டிலேன்
புரந்தராதி யின்பமும்
ஏகநின் கழலிணை யலாதிலேனென்
எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி
யஞ்சலிக்கணே
ஆக என் கை கண்கள் தாரை யாற
தாக ஐயனே'

அன்றியும்,

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்
போல்
மறையநின் றுளன் மாமணிச்சோதி
யான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றி
னால்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்
குமே"

என்பன ஆதிதெய்வத் திருமறைகள் பேறுகூட்டியனவற்றை வற்புறுத்தியமை காண்க, செவி வாய் முதலிய இந்திரியங்கள் முதலானது உடைமையாகிய மாயேயமெனப்படுவனவற்றி ஆன்மாக்களாமெனப்படுவனவல்ல. அவை தொழிற்படுவதும் முதல்வனதருளாலன்றி நம் வயத்தாலல்ல, தனு கரண புவன போகங்களும் தவ்வாரே ஆம். அவற்றோடுகூடிநின்று வினைகளை ஈட்டி நுகர்ந்து வருகின்ற யாமும் ஞானக்கிரியைகளை முதல்வன் விளக்கவழி விளங்கியும் அல்லுழி விளங்காமை, இவ்வாறு முதல்வனை யன்றியமையாமையால் அம்முதல்வனது உடைமைபாவேமல்லது சுதந்திரவேமல்லேம் என்று இங்ஙனம் பசுபாசங்களின் இயல்புகளை உள்ளவாறுணர்ந்து செய்வனவெல்லாம் அவன் அருளின வழிநின்று செய்யுஞ் செயலாய்க் கண்டவிடத்து நிற்பேமாயின் யாம் எவற்றாலும் பந்தமடைதலில்லை. இந்நிலையில் இறைவன் நம்மாட்டுத் தாயினும் நல்லனுமாய் நம்முள்ளிருந்து உதவுவன்.

"நாமல்ல இந்திரிய நமவழியின் அல்லவழி
நாமல்ல நாமுமரனுடைமை —
யாமென்னின்
னெத்தநுமின்று மிறைபணி
யார்க்கில்லை வினை
முற்செய் வினையுந் தருவான் முனை"

எனவருஞ் சிவஞானபோத உதாரணவெண்பாவால் மேற்கூறியவற்றின் உண்மை நிலைநாட்டப்பட்டமை காண்க. இந்நிலவுலகின் கண் வாழும் மக்களாகிய யாம் அனைவரும் இறைவனின் மக்களே. இறைவன் நம்மனைவரையும் உயர்வுதாழ்வு இன்றி ஒரே பெற்றதாகவே மதிக்கின்றனன். ஆயின் சிறப்புடைய யாம் கன்மவினைக்கேற்றவாறு சாதி ஆயுள் போகமென்பனவற்றைப் பெறுகின்றனம். யாவரும் இறைவனின் பிள்ளைகளே என்பதை மெய்யென்பதின் தத்துவசாரமாம் புகலாது ஆன்மஉயர்கள் எல்லாம் புரிந்து யாவரையும் சகோதரர்களாக மதித்து ஒழுகவேண்டும். யாவும் இறைசெயலே யென்பதை மறந்துவிடலாகாது. இந்நிலையில் இறைவன் "தாயினும் நல்லன்" ஆதல் சத்தியம்.

## இந்துசாதனம்

பத்திரக் கிரயம்

ஒருவருடத்திற்கு

யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் ஆள் மூலம்

| ஆங்கிலம் | தமிழ் | ஆங்கிலம் தமிழ் |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 6 50 | 6 50 | 10 50 |

இந்தியா இலங்கை தபால்மூலம்

| ஆங்கிலம் | தமிழ் | ஆங்கிலம் தமிழ் |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 9 50 | 9 50 | 13 50 |


## மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா"

அகாலப் பிரசவத்தை முற்றுகத் தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்டதைலம்.

டாக்டர். எஸ். சி. பாலின "சாந்தன் றக்ஷா" கற்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிதாபகரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றை தடுத்து மற்றும் நாட்சென்ற கற்ப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் கசிவைக் கட்டுப்படுத்தி, நச்சுக்குடலிலிருந்து இரத்தக்கறையையும் பல சிக்கல்களையும் கற்பப் பையில் புகுந்து அதனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டு பண்ண விடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படி தைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம், மாதரின் கற்பகாலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும். நூற்றுக்கணக்கான எதிர்பாராத சிபார்சுப் பத்திரங்கள் பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர், எஸ். சி. பால் ஆண்டு சன்ஸ், கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:

கொன்சிஸ்றறி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: சிற்றி டிஸ் பென்சறி

பெருந் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

H. 131 12-10-44—


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 30, November, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org